# வெற்றிட அறிவித்தல்

## <u>மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு</u>

மத்திய மாகாண சபையின் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் கீழ்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வெற்றிடம் நிலவும் பதவிகள்**

| தொடர் இல. | பதவிகள் | உரிய சேவையும் தரமும் | சம்பள அளவு | தகைமைகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைப் பணிப்பாளர் | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் **II** | **SL 1- 2006** | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை நிருவாகத் தரம் **II** இற்கு உரியவராக இருத்தல் வேண்டும் ( இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் **II** இல் தகைமையுடையவர்கள் இல்லாதவிடத்து இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II** அல்லது அதிலும் உயர் தரத்திலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்) | 01 |
| 2 | மாகாண உதவி ஆயுர்வேத ஆணையாளர் | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் **II** | **SL 1- 2006** | | 01 |
| 3 | வைத்திய அத்தியட்சகர் , ஆதார ஆயுர்வேத வைத்தியசாலை, தொலுவ | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **I** | **SL 2- 2006** | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **I** இற்கு உரியவராக இருத்தல் வேண்டும் ( குறித்த தரத்தில் தகைமையுடையவர்கள் இல்லாதவிடத்து இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II** இலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்) | 01 |
| 4 | வைத்திய அத்தியட்சகர் , ஆதார ஆயுர்வேத வைத்தியசாலை, மாத்தளை வடக்கு | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **I** | **SL 2- 2006** | | 01 |
| 5 | பொறுப்பு வைத்திய அதிகாரி, மாகாண ஆயுர்வேத மருந்து உற்பத்திச்சாலை | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **I** | **SL 2- 2006** | | 01 |
| 6 | பொறுப்பு வைத்திய அதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை - கெலிஓய | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II /I** | **SL 2- 2006** | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II /I** இற்கு உரியவராக இருத்தல் வேண்டும் | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | பொறுப்பு வைத்திய அதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை - ஹதகனாவ | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II /I** | **SL 2- 2006** | | 01 |
| 8 | பொறுப்பு வைத்திய அதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை - நில்தண்டாஹின்ன | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை தரம் **II /I** | **SL 2- 2006** | | 01 |

**02. ஆட்சேர்ப்பு முறை**

1. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் திறமை வரிசையின் அடிப்படையில் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும்.
2. உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து, அதற்காக அதிலும் குறைந்த தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுமாயின் தாபன விதிக்கோவையின் ஏற்புகளுக்கமைய பதில் கடமை புரிதல் அடிப்படையிலே ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படும். உரிய தரத்தில் தகுதியுடைய உத்தியோகத்தர் கிடைக்கப்பெறுமிடத்து இப்பதில் கடமைப் புரிதலுக்காக வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்படும்

**03. தகைமைகள்**

i. 2016-12-31 ஆம் திகதியன்று ஆயுர்வேத வைத்தியராக குறைந்த பட்சம் 08 வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்

ii. அதில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் ஆயுர்வேத வைத்தியசாலையொன்றில் அல்லது முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றை வகித்திருத்தல் வேண்டும்

iii. ஆயுர்வேத துறை சார்ந்த பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது அது தொடர்பான அதியுயர் தகுதி பெற்றிருத்தல்

iv. தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று

v. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வெண்டும்

**04. விண்ணப்பிக்கும் முறை**

முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2017-05-29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சுச் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் அனுப்புதல் வேண்டும்) “செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, த.பெ. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினை இட்டு

அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ............................. பதவிக்கு விண்ணப்பம் கோரல் ” எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்ட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திறாத, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் குறிப்பிட்ட மாதிரிக்கு புறம்பாகவும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.psc.cp.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

இவ்வறிவித்தல் தொடர்பில் தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு தொடர்பாக ஏதேனும் கருத்துவேறுபாடுகள் காணப்படின், சிங்கள அறிவித்தலே கவனத்தில் கொள்ளப்படும்.

கை/இ: ஆர். எம். என். ரத்நாயக்க
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2017.04.26 ஆம் திகதி
மத்திய மாகாண சபையின்
அரச சேவைகள் ஆணைக்குழுவில்.